13.02.2025

அ.வ.எண். 38/2019

வாசா.1  - K.R.ராமகிருஷ்ணன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய வழக்கு சொத்து விவரம் என்னுடைய அம்மாவின் பத்திரத்தின் அடிப்படையில் தான் கொடுத்துள்ளேன். என்னுடைய சொத்து புல எண்.442/2 ல் உள்ளதாக தான் வரைபடம் மற்றும் சிட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அதேபோல் பிரதிவாதியின் சொத்து 442/1 ல் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ-3 புல வரைபடத்தில் நான் குறிப்பிடும் சந்து எந்த இடத்தில் உள்ளது என்றால் புல வரைபடத்தில் இல்லை. நீதிமன்றத்தில் ஆணையர் தாக்கல் செய்த சர்வேயர் வரைபடத்தில் என்ன குறிப்பிட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கையில் 442/2 ல் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

நான் வீடு கட்டியதற்கு கட்டிட அனுமதி வரைபடம் வாங்கியுள்ளேன், நான் அந்த அனுமதி வரைபடத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதில் எந்த சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பார்கள் என்றால் ஆமாம். நான் அந்த  கட்டிட அனுமதி வரைபடத்தை தாக்கல் செய்தால் எனக்கு விரோதமாக போய்விடும் என்பதால் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.  ஏற்கனவே இருந்த பழைய வீட்டை இடித்துவிட்டு நான் புது வீடு கட்டியுள்ளேன் என்றால் ஆமாம்.  அவ்வாறு கட்டும்போது என்னுடைய அத்தில் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு ஆகிய மூன்று இடத்திலும் வீடு கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய அத்தில் வீடு கட்டிவிட்டு பிரதிவாதிகள் தான் எனக்கு இடம் விட வேண்டும் என்று நான் தகராறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதியின் இடத்தை விட எனக்கு தான் அதிகாமாக உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதி இடத்தில் குறைந்த அளவு தான் இடம் உள்ளது என்றால்

சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதிகளுக்கு 442/4 ல் இருந்து 442/1 காலைக்கு செல்ல 442/2 நம்பர் காலை வழியாக செல்ல தடம் இருந்தது என்று அதை நான் தான் அடைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வசதி குறைவானர்கள் என்பதால் காவல் துறை மூலம் அவர்களை விரட்டி இடத்தை அபகரிக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 ஆவணத்தில் சொத்து விவரம் சரியாக இல்லாததால் தான் அசல் ஆவணம் தாக்கல் செய்யாமல் புரியாத நகல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்தில் மேல்புற SUNSHADE களை பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் பிரதிவாதியின் இடத்திற்கு மேல் நீட்டி கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய அத்திலேயே வீடு கட்டியிருப்பதால் நீதிமன்றத்தில் இருந்த வந்த நில அளவையர் அவரது வரைபடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் எனக்கு சாதகமாக தெளிவாக இல்லாமல் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகைப்படத்திற்கு குறுந்தகடு தாக்கல் செய்யாததால் அதை ஏற்றுக்கொள்ளகூடாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ராமகிருஷ்ணன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur